**<u>OS.No.188/2024, Dated 29.04.2025</u>**

The witness sworn under Oaths Act 1969 on this the 29th day of April 2025.

**வா.சா.2 - வரதராஜன் த/பெ வெங்கிடேசன் வரவழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனது ஊர் சென்னாவரம் ஆகும். நான் ஐ.டி.ஐ படித்துள்ளேன். நான் பெட்ரோல் பங்கில் மேனேஜராக பணிபுரிகிறேன். நான் வருமான வரி செலுத்துவதில்லை. வாதி எனது சித்தப்பா என்றால் சரிதான். எனது பணி நேரம் காலை 8 மணி முதல் இரவு 7 மணிவரை ஆகும். பங்கில் பணத்தை நான் தான் வசூல் செய்து கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். அதனால் நான் 7 நாட்களும் பணிக்கு சென்றுவிடுவேன் என்றால் சரிதான். எனது வீட்டிற்கும், வாதியான எனது சித்தப்பா வீட்டிற்கும் இடையே சுமார் 5, 6 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். இந்த வழக்கை வாதி ஒருவர் மீது தான் தாக்கல் செய்துள்ளார். நான் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் வரவில்லை. எனது சித்தப்பா அழைத்ததன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். எனது முதல் விசாரணையின் போது நிருபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் என்றும், அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சுந்தரத்தை எனக்கு சின்ன வயதில் இருந்து தெரியும். அவரது குடும்பத்தை தெரியாது. எனக்கு சுந்தரத்தின் குடும்பத்தை பற்றி தெரியாது. 2009 - 2010 ஆம் ஆண்டிலேயே சுந்தரம் தனியாக வீடு கட்டிக்கொண்டு வந்துவிட்டார் என்பதை என்னால் மறுக்கமுடியுமா என்றால் எனக்கு அந்த விபரம் தெரியாது. எனக்கு வழக்கு பற்றி எதுவுமே தெரியாது என்றாலும் அதனால் தான் பிரதிவாதிகள் எத்தனை நபர்கள் என்று கூட என்னால் சொல்ல இயலவில்லை என்றால் சரியல்ல. எந்த தேதியில் பணம் கொடுத்தார்கள் என்றால் 06.06.2019 அன்று பணம் கொடுத்தார்கள். பழனி என்பவரை எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை எனது சித்தப்பா தான் கூறினார். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை எனது சித்தப்பா வீட்டில் வைத்து தயார் செய்தார்கள். பழனியை எனக்கு தெரியாது என்று தற்போது நான்

குறிப்பிட்டுள்ளதால்' எனது நிரூபண வாக்குமூலத்தில்' பழனியை பற்றி குறிப்பிட்டுள்ளதால் அதன் சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என்றால் சரியல்ல. 06.06.2019 அன்று பணம் கொடுத்ததாக சொல்லப்படுவது மதிய நேரம் ஆகும். நேரம் எனக்கு குறிப்பாக தெரியவில்லை. அன்றைய தினம் ரூபாய் 7 லட்சம் பணம் கொடுக்கப்பட்டது. அந்த ரூபாய் 7 லட்சத்தை நான் எண்ணிக்கொடுத்தேனா என்றால் இல்லை. அதனால் எனக்கு எவ்வளவு தொகை என்று தெரியாது என்றால் சரியல்ல. ரூபாய் 7 லட்சம் பணத்தை தனபால் கவுண்டர் கையில் எனது சித்தப்பா கொடுத்தார். தனபால் கவுண்டர் இந்த வழக்கில் தரப்பினர் இல்லை. ரூபாய் 7 லட்சம் பணத்தை பணமாக தான் கொடுத்தார். ஒரே தவணையில் தான் தனபால் கவுண்டரிடம் கொடுத்தார். எனது சித்தப்பா கிராம நிர்வாக அதிகாரியாக இருந்து ஓய்வு பெற்றவர் என்றால் சரிதான். அவர் தற்சமயம் பைனான்ஸ் தொழில் செய்கிறாரா என்றால் இல்லை. வருமானவரி சட்டத்தின் படி 2016 ஆம் ஆண்டிற்கு பின்னிட்டு ரூபாய் 2 லட்சத்திற்கு மேல் பணமாக பணப்பரிவர்த்தனை செய்வது சட்டப்படி குற்றம் என்றால் எனக்கு அந்த விபரங்கள் தெரியாது. அந்த குற்ற நடவடிக்கையில் நானும் பங்கேற்றதால் நானும் தண்டனைக்கு உரியவர் என்றால் சரியல்ல. சுந்தரம் உடன் பிறந்தவர்கள் யார் யார் என்று எனக்கு தெரியாது. சுந்தரம் என்ன பணிபுரிகிறார் என்றால் கிராம உதவியாளராக உள்ளார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ல் உள்ள கையெழுத்துக்கள் யார் யாருடையது என்று எனக்கு தெரியாது. தீபா எனது சித்தப்பா மகள் ஆவார். அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. அவர் வந்தவாசியில் வசிக்கிறார். அவருக்கு 2002 ஆம் ஆண்டு திருமணம் ஆனது. நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை பெற்று நான் சாட்சியம் அளிக்க வராதபோது பிராதுபடி தீர்ப்பாகவேண்டும் என்று நான் கோரியுள்ளது என்னை Interested Witness என்று காட்டுகிறது என்றால் சரியல்ல. எனது சித்தப்பா சொல்லியபடி மட்டுமே நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு வழக்கு பற்றி எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. தனபால் கவுண்டா இந்த வழக்கில் தரப்பினர் இல்லை என்பதால் நான் கொடுத்த பிரமாண வாக்குமூலமே பொய்யானது என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 ஆவணம் அச்சிடப்பட்ட Form என்றால் சரிதான். வா.சா.ஆ 1 ஆவணத்தை பூர்த்தி செய்தது நான் இல்லை எனது சித்தப்பா தான். அதை அவரது

வீட்டில் வைத்து தான் பூர்த்தி செய்தார். எனது வீடு 5 கிலோ மீட்டர் தள்ளி உள்ளது என்றாலும், தீபாவின் வீடும் தள்ளி உள்ளது என்றாலும், அன்றைய தினம் மதிய நேரம் வாதியின் வீட்டிற்கு சென்றதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால˙ சரியல்ல. நானே தனபால˙ கவுண்டா˙ பணத்தை வாங்கியதாக குறிப்பிட்டுவிட்டு எனது பிரமாண வாக்குமூலத்தில˙ பிரதிவாதிகள˙ கடன் வாங்கியதாக பொய்யாக சொல்லியுள்ளேன˙ என்றால˙ சரியல்ல. என்னுடைய தற்போதைய பதில்களும், நிருபண பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகளும் முரண்பாடாக உள்ளதால் எனது சாட்சியம் பொய்யானது என்றால் சரியல்ல. நான் எனது சித்தப்பாவிற்காக பொய்யாக சாட்சியம˙ அளிக்கிறேன˙ என்றால் சரியல்ல. இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னா˙ சாட்சியால˙ சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

ஒம்/- எஸ்.சரண்யா
சார்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.